# OA : 25 of 2021

**"The Chennai Metropolitan Water Supply and Sewerage Board ignores mix of Sewage water carried in Lorry in Buckingham Canal"**

www.dinamalar.com | சென்னை | ● செவ்வாய் ● நவம்பர் 30 2021

தீயணைப்பு வீரர்கள்.

வாடிக்கையாக உள்ளது.

OA 25/2021

## பகிங்ஹாமில் லாரி கழிவு நீர் கலப்பு கண்டு கொள்ளாத குடிநீர் வாரியம்



■ பகிங்ஹாம் கால்வாயில் அத்துமீறி கழிவு நீரை விடும் லாரிகள். இடம்: சோழிங்கநல்லூர்.

**சோழிங்கநல்லூர், நவ. 30–**

லாரிகளில் கழிவு நீர் ஏற்றி வந்து பகிங்ஹாம் கால்வாயில் கலப்பது தொடர்கதையாக உள்ளது. தடுக்க வேண்டிய குடிநீர் வாரியமோ கண்டுக்கொள்ளாமல் இருப்பது அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

துரைப்பாக்கம், கண்ணகி நகர், சோழிங்கநல்லூர், செம்மஞ்சேரி, நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், பனையூர் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது. சோழிங்கநல்லூர் மண்டலம். இங்கு ஒன்பது வார்டுகள் உள்ளன.

விரிவாக்க பகுதியானதால், கழிவு நீர் இணைப்பு திட்டம் இன்னும் செயல்பாட்டுக்கு வரவில்லை. இதனால், லாரிகள் வாயிலாக கழிவு நீர் அகற்றப்படுகின்றன.

இவை, பெருங்குடி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்து செல்ல வேண்டும். நீர் நிலைகளில் கழிவு நீர் கலப்பதை தடுத்து, லாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என, குடிநீர் வாரியத்திற்கு உத்தரவிடப்பட்டு உள்ளது.

ஒரு வாரமாக, சோழிங்கநல்லூர், நீலாங்கரை, செம்மஞ்சேரி பகுதியில் லாரியில் அகற்றப்படும் கழிவு நீரை, பெருங்குடிக்கு எடுத்து செல்லாமல், பகிங்ஹாம் கால்வாயில் கொட்டப்படுகிறது.

குறிப்பாக, சோழிங்கநல்லூரில் இருந்து, கிழக்கு கடற்கரை சாலை செல்லும் பகுதி வழியாக, எளிதாக லாரிகள் பகிங்ஹாம் கால்வாய்க்கு செல்கின்றன.

சில மாதங்களுக்கு முன், இந்த பாதையை மாநகராட்சி மூடியது. தடுப்புகளை அகற்றி, மீண்டும் லாரி கழிவு நீர் பகிங்ஹாம் கால்வாயில் கொட்டப்படுகிறது.

இதை தடுக்க, குடிநீர் வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

**News Item in Dinamalar newspaper, Chennai Edition dated 30th November 2021**

**Sholinganallur:** Sewage water carried in Lorry is mixed in Buckingham Canal has become a continuous story. It is disappointing that the Chennai Metropolitan Water Supply and Sewerage Board who is supposed to prevent sewage mix is ignoring. Sozhinganallur Zone consists of Thuraipakkam, Kannakinagar, Sozhinganallur, Semmancheri, Neelangarai, Injambakkam, and Paniyur. It has Nine Wards. Since it is an extension area, facility of sewage connections are not yet implemented. Therefore, Lorries are being used to clean and transport sewages waters. The sewages are supposed to be transported to Perungudi Sewage Treatment Plant The Chennai Metropolitan Water Supply and Sewerage Board have been directed to take action on Lorries and to stop mix of sewage water in the water bodies.